நிதியியல் கல்வி வாரம்
ஜுன் 4-8, 2018

# அங்கீகரிக்கப்படாத மின்னனு வங்கிப் பரிவர்த்தனை - வாடிக்கையாளரின் பொறுப்பு

உங்கள் வங்கிக் கணக்கில் அல்லது கடன் / பற்று அட்டையில் அங்கீகரிக்கப்படாத அல்லது மோசடியான பரிவத்தனை ஏதேனும் தென்படுகிறதா?
பதட்டப்படாதீர்கள் ; கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிகளை பின்பற்றி உங்களையும், வங்கியையும் பாதுகாத்திடுங்கள்


1. அங்கீகரிக்கப்படாத மின்னனு பரிவர்த்தனை தென்பட்டவுடன், விரைவாக தொலைபேசி,குறுஞ்செய்தி, மின்னஞ்சல்மூலம் வங்கிக்குத் தெரியப்படுத்துங்கள். அல்லது நேரிலும் வங்கிக்கு சென்று தெரிவிக்கலாம். அதிக கால தாமதம் செய்வதால் உங்களுக்கோ, வங்கிக்கோ அதிக நஷ்டம்.
2. உங்கள் புகாருக்கான ஒப்புகையைப் பெறுங்கள்.
3. புகார் கிடைத்த தேதியிலிருந்து 90 நாட்களுக்கு மிகாமல், புகார் தீர்க்கப்பட வேண்டும்.

## உங்கள் பொறுப்பை அறிந்திடுங்கள்

**உங்கள் அலட்சியம் #**
- நீங்கள் அறிவிக்கும் வரை → நஷ்டம் உங்களுடையது
- நீங்கள் அறிவித்தபின் → நஷ்டம் வங்கியுடையது

**வங்கியின் அலட்சியம்**
- வங்கியின் நஷ்டம்

**மூன்றாம் தரப்பினர் மீறல்**
- 3 வேலை நாட்களுக்குள்* → உங்களுக்குப் பொறுப்பு ஏதுமில்லை
- 4 முதல் 7 வேலை நாட்களுக்குள்* → பரிவர்த்தனை தொகை அதிகபட்சமாக BSBD கணக்கில் ₹ 5,000 வரை. சேமிப்புக் கணக்குகள் / கடன் அட்டை (₹ 5 லட்சம் வரம்புடைய) பரிவர்த்தனைகளில் ₹ 10,000 வரை
- 7 நாட்களுக்கு மேல்* → உங்கள் வங்கியின் கொள்கைப்படி



* -வங்கியிடமிருந்து தகவல் கிடைத்ததிலிருந்து அறிவிக்க எடுத்துக்கொள்ளும் காலம்.
# -கடவுச் சொல், பின், OTP ஆகியவற்றைப் பகிர்தல் போன்றவை

## நினைவில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள்

- குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் எச்சரிக்கைகளுக்குப் பதிவு செய்திடுங்கள்
- உங்கள் வங்கியின் தொலைபேசி எண், இலவச உதவி மைய தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, உங்கள் வங்கிக் கிளையின் முகவரி ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளுங்கள்

நிதி கல்வியறிவு • வளமைக்கு வழி

**உங்கள் பொறுப்பை அறிந்திடுங்கள்**

நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத் துறை
இந்திய ரிசர்வ் வங்கி
www.rbi.org.in